

கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க கழக இளைஞரணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி மதுரை மாவட்டம் மேலூர் அருகில் உள்ள அரிட்டாபட்டி கிராமத்தில் டங்ஸ்டன் வரவே வராது என்ற தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டினை பொதுமக்களிடையே வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி எடுத்துரைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் சங்கீதா, சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் ஆ.வெங்கடேசன், மாவட்ட எஸ்.பி. அரவிந்த் மற்றும் அதிகாரிகள், கிராம மக்கள் திரளாக பங்கேற்றனர்.

### முகக்கவசம் அணிவதும் – கைகளைக் கழுவுவதும் நல்லது!

# HMPV வைரஸ் வீரியத் தன்மையற்றது! பதற்றப்படத் தேவையில்லை!

## சட்டப் பேரவையில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதிலுரை!



சென்னை, ஜன. 10-

சட்டப் பேரவையில் நேற்று முன்தினம், 'HMPV வைரஸ்' குறித்து நடைபெற்ற விவாதத்திற்குப் பதிலளித்த மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், "பொதுச் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல் என்பது, இனிமேல், சளி, இருமல், காய்ச்சல் போன்ற நோய்ப் பாதிப்புகள் உள்ளவர்கள், பொது இடங்களுக்குச் செல்லும்போது, முகக் கவசம் அணிந்து செல்வது என்பது மிக அவசியமான ஒன்று என்றும், கைகளைக் கழுவுவதும், sanitize செய்து கொள்வதும் நல்லது என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதுவே போதும் என்று நான் நினைக்கிறேன். எனவே, இதனால் நாம் பெரிய அளவில் பதட்டப்பட வேண்டியதில்லை, தொடர்ந்துவரும் virusகளைப் போலவே இதுவும் சாதாரணமான ஒன்றுதான்; இதில் எந்த வீரியத் தன்மையும் இல்லை" என்று குறிப்பிட்டார்.

அமைச்சரின் பதிலுரை வருமாறு:-

உறுப்பினர்கள் ஜி.கே. மணி, பிரின்ஸ், சிந்தனை செல்வன், வேல்முருகன், விஜயபாஸ்கர் ஆகியோர் அண்மையில் சீனாவில் பரவி வருவதாகச் சொல்லப்படுகிற HMPV என்கின்ற வைரஸ் குறித்து இங்கே கருத்துகளை தெரிவித்திருக்கிறார்கள். Human Metapneumo virus என்று சொல்லப்படுகிற இந்த HMPV என்பது இன்றைக்கு சீனாவில் பரவியிருக்கிறது என்று சொல்லப்பட்டாலும் கூட இது ஒரு 50 ஆண்டுகளுக்கு முன்னாலேயே கண்டறியப்பட்ட ஒரு வைரஸ் ஆகும். குறிப்பாக 2001 ஆம் ஆண்டிலேயே இந்த வைரஸ் தொற்று என்பது கண்டறியப்பட்டு இருக்கிறது.

இந்த வைரஸைப் பொறுத்தவரையில் குளிர் காலம் மற்றும் இளவேனில் காலங்களில் இந்த நோய் பரவக்கூடும் என்பது ஏற்கெனவே அனைவரும் அறிந்திருக்கிற ஒன்று. இந்த நோய்க்கான அறிகுறிகள் என்பது சளி, இருமல், காய்ச்சல் மற்றும் சுவாச பாதிப்புகள் என்பதும் இப்போது நம்முடைய மன்ற உறுப்பினர்களும் சொல்லியிருக்கிறார்கள், அனைத்து ஊடகங்களிலும் இந்தச் செய்தி பரவி வருகிறது. சுவாச நோய் பாதிப்புக்கு எடுத்துக்கொள்ளும் நாட்கள் என்பது 3 முதல் 6 நாட்கள் வரை இந்த பாதிப்பு என்பது இருந்து வருகிறது.

மரியாதைக்குரிய விஜயபாஸ்கர் அவர்கள் சொன்னதைப் போல மிகப்பெரிய அளவில் ஏற்கெனவே இணை நோய்கள், பல்வேறு நோய் பாதிப்புகள் உள்ளவர்களுக்கு இந்த வைரஸ் பாதிக்குமேயானால் அது ஓரளவுக்கு தீவிரத் தன்மை அடைந்து நுரையீரல் பாதிக்கக்கூடிய அளவுக்கான பாதிப்பை ஏற்படுத்துமே தவிர பெரிய அளவில் இதனால் பதட்டப்பட வேண்டிய அவசியம் என்பது இல்லை.

இந்தியாவைப் பொறுத்தவரை இன்றைக்கு கடந்த 2024லேயே 714 பேர்களுக்கு இதுசம்பந்தமான பரிசோதனைகள் செய்ததில் பலருக்கு இந்நோய் பாதிப்புகள் இருந்தது என்பது கடந்த ஆண்டேகூட கண்டறியப்பட்டிருக்கிறது.

நம்முடைய தமிழ்நாட்டில்கூட சென்னையில் ஒரு நபருக்கும், சேலத்தில் ஒரு நபருக்குமாக இரண்டு நபர்களுக்கு இந்த நோய் இருப்பதாக கண்டறியப்பட்டு, அவர்கள் கண்காணிப்பில் இருக்கிறார்கள். அவர்கள் இருவரும் நலமுடன் இருக்கிறார்கள். சுவாசநோய்த் தொற்றுகள் தாமாகவே குணமடையும் என்றவகையில்தான், மருத்துவ வல்லுநர்கள் இதற்கான எந்த சிறப்பு சிகிச்சையும் தேவையில்லையென்று கூறியிருக்கிறார்கள். குறிப்பிட்ட இந்த Virusஐப் பொறுத்தவரை, எதிர்ப்பு மருந்துகள் anti viral drugs மற்றும் இதற்கான தடுப்பூசிகள் ஏதும் இதுவரை அறிவிக்கப்படவில்லை. இந்தியாவைப்பொறுத்தவரையில், உறுப்பினர் சிந்தனை செல்வன் பேசியபோது, இந்த virus பாதிப்புகள் குறித்து WHOஓ அல்லது இந்திய சுகாதாரத் துறையின் அமைச்சகமோ ஏதேனும் கூறியிருக்கிறார்களா என்று கேட்டிருக்கிறார்கள். WHO வைப் பொறுத்தவரையில், 2019 ஆம் ஆண்டில் கொரோனா பாதிப்பு கள் துவங்கியவுடனேயே, அந்த கொரோனா நோய்த் தொற்று பலவித மாற்றங்களைப் பெற்று, corona, beta, delta, delta plus, kappa, omicron போன்ற பல்வேறுவிதமான உருமாற்றங்களைப் பெற்றது. அந்த அனைத்து virusகளும் பெரிய அளவிலான வீரியத் தன்மையுடன் கூடிய virusகளாகவே இருந்தன.

உறுப்பினர் விஜய பாஸ்கர் இந்த அவையில் கூறியபோது, நேற்றைய பத்திரிகையாளர் சந்திப்பில் 'நான் virusகளோடு இனிமேல் வாழ வேண்டும்' என்கின்ற ஒரு கருத்தை தெரிவித்ததாக கூறினார்கள். அது நான் கூறிய கருத்து அல்ல; WHOவின் தலைமை விஞ்ஞானி, டாக்டர் சௌமியா சாமிநாதன் அவர்கள், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலேயே தெரிவித்துள்ளார்கள். 'இனிமேல் உலகம் முழுவதும் இது போன்ற virusகளின் வருகை என்பது தவிர்க்க முடியாதது, அந்த virusகளோடு நாம் வாழ்ந்தே தீர வேண்டும் என்பதும் தவிர்க்க முடியாதது' என்று WHOவின் தலைமை விஞ்ஞானி, டாக்டர் சௌமியா சாமிநாதன் அவர்கள் தெரிவித்திருக்கிறார் என்பதை நான் இந்த வைரஸ்களெல்லாம் வந்தபோதே சொன்னேன். ஆனால், இந்த virusஐப் பொறுத்தவரையில், இது ஒரு வீரியத்தன்மை வாய்ந்த virus அல்ல. இதற்கென்று பிரத்தியேக மருந்தும் இல்லை, பிரத்தியேக சிகிச்சையும் இல்லை. இதற்கான ஒரே ஒரு அறிவுறுத்தல் என்பது, 3 முதல் 6 நாட்கள் வரையில் சும்மா இருந்தாலே போய்விடும் என்பதுதான்.

மேலும், இந்நோய்க்காக நாம் வெளியே பல இடங்களுக்குச் சென்று ஆய்வு அல்லது பரிசோதனை செய்து கொள்ள வேண்டிய அவசியம்கூட இல்லை. நோய் பாதிக்கப்பட்டவர்கள் யாரேனும், பரிசோதனைக்குச் செல்கிறபோது, நிச்சயம் HMPV நோய்தொற்றாககூட இருந்திருக்கும் வாய்ப்பு இருக்கலாம். ஆனால், அது தானாகவே போய்விடும். எனவே, இதற்காக நாம் பெரிய அளவில் பயப்பட வேண்டிய அவசியம் இல்லை. இது குறித்து பதட்டம் கொள்ள வேண்டிய அவசியமும் இல்லை.

இதற்காக பிரத்தியேக படுக்கைகள்கூட தேவையில்லை. உறுப்பினர் சிந்தனை செல்வன் அவர்கள், இதற்காக WHO ஏதாவது அவசரநிலை பிரகடனம் செய்திருக்கிறார்களா என்று கேட்டார். 2019 ஆம் ஆண்டில், கொரோனா நோய்த் தொற்று வந்தபோது, WHO, medical emergency ஒன்றை declare செய்தார்கள். 2023 ஆம் ஆண்டு மே மாதம் 5ம் தேதி, அதே WHO, அதை விலக்கிக்கொண்டார்கள். அதன் பிறகு, குரங்கு அம்மை (Monkey Pox) தொற்று வந்தபோது, அதேபோன்று ஒரு அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டது. அப்போதெல்லாம் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கேற்ப, WHO மற்றும் இந்திய மக்கள் நல்வாழ்வுத் துறையின் அறிவுறுத்தலுக்கேற்ப, தமிழ்நாட்டிலிருக்கிற சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற அனைத்து பன்னாட்டு விமான நிலையங்களிலும் வெளிநாடுகளிலிருந்து வருபவர்களை கண்காணித்திட பொறுப்பு மேற்கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், முதல்வர் அவர்களுடைய அறிவுறுத்தலுக்கேற்ப, இது போன்ற எந்த நெருக்கடி ஏற்பட்டாலும், எந்த அவசர மருத்துவ நிலைகள் ஏற்பட்டாலும், முதல்வர் அவர்கள் அவற்றை கண்காணிப்பதற்கு உடனடியாக அறிவுறுத்துவதும், அவற்றை உடனடியாக போக்குவதற்கு, உரிய நடவடிக்கைகளை தொடர்ந்து, மேற்கொள்ளச் செய்துவருகிறார்கள். அந்தவகையில் இந்நோய்க்கு பெரிய அளவில் அச்சப்பட வேண்டிய அவசியம் இல்லை. WHO இதுவரையில் எந்தவித அறிவுறுத்தலையும் தெரிவிக்கவில்லை. இந்த நிலையில் நேற்றைக்கு முன்தினம், ஒன்றிய அரசாங்கத்தின் சுகாதாரத் துறைச் செயலாளர் அவர்கள் காணொலி வாயிலாக அனைத்து மாநிலங்களின் சுகாதாரத் துறைச் செயலாளர்களோடு கலந்து பேசி, "இது குறித்து பதட்டப்பட வேண்டாம், எந்த விதமான அறிவுறுத்தல்களையும் மக்களுக்கு விடுக்க வேண்டாம்" என்றும், இதையே தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, பொதுச் சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல் என்பது, இனிமேல், சளி, இருமல், காய்ச்சல் போன்ற நோய்ப் பாதிப்புகள் உள்ளவர்கள், பொது இடங்களுக்குச் செல்லும்போது, முகக் கவசம் அணிந்து செல்வது என்பது மிக அவசியமான ஒன்று என்றும், கைகளைக் கழுவுவதும், sanitize செய்து கொள்வதும் நல்லது என்றும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதுவே போதும் என்று நான் நினைக்கிறேன். எனவே, இதனால் நாம் பெரிய அளவில் பதட்டப்பட வேண்டியதில்லை, தொடர்ந்துவரும் virusகளைப் போலவே இதுவும் சாதாரணமான ஒன்றுதான்; இதில் எந்த வீரியத் தன்மையும் இல்லை.

நோய் பாதிப்பு இருப்பவர்கள் பொது நிகழ்ச்சியில் கலந்துகொள்ளும்போது கூட்டம் அதிகமாக இருக்கின்ற இடங்களுக்குச் செல்லும்போது, முகக் கவசம் அணிந்து செல்வது நல்லது என்று பொது சுகாதாரத் துறை ஏற்கெனவே அறிவித்திருக்கிறது.

இவ்வாறு அமைச்சர் பதிலுரை வழங்கினார்.



காரைக்குடி மாநகரில் தமிழக முதல்வர் உத்தரவின் பேரில் பொங்கல் பரிசுத் தொகையினை காரைக்குடி 18 வது வட்டத்தில் துணை மேயர் காரைக்குடி மாநகர செயலாளர் நா.குணசேகரன் வழங்கினார். உடன் வட்டச் செயலாளர்கள் ரமேஷ், ஐயப்பன், கணேசன் ,குழந்தை, ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

# சிந்துவெளியின் பண்பாட்டை அறிவியல் பூர்வமாக வெளிக் கொண்டுவர முதல்வரின் முயற்சி பாராட்டுப் பெற்றுள்ளது!




பொன். முத்துராமலிங்கம்
முன்னாள் அமைச்சர்
உயர் நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர்



சிந்துவெளி அகழாய்வில் திராவிடப் பண்பாட்டு சான்றுகளின் கண்டுபிடிப்பிற்கான நூற்றாண்டு நிறைவு விழாவினையொட்டி தமிழக அரசால் ஏற்பாடு செய்யப்பட்ட பண்பாட்டு கருத்தரங்க விழா தொடக்க நிகழ்ச்சியில் தமிழ்நாட்டின் முதல்வர் ஆற்றிய உரை என்பது, உலக நாடுகள் முழுமையும் பரவி வாழும் தமிழர்கள் படித்து உள்வாங்கிக் கொண்டு காலமெல்லாம் மகிழ்ந்து பெருமைப்படத்தக்க வரலாற்றுபேருரையாகும். 1924 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபதாம் நாள் இந்திய தொல்லியல் துறை இயக்குனர் ஜெனரல் ஜான்மார்ஷல் சிந்துவெளி நாகரிகம் குறித்து வழங்கிய சான்றாவணங்களும், சான்றுப்பொருட்களும் இந்திய துணைக்கண்டத்தின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உருவாக்கியது என்பதோடு இந்திய துணைக்கண்ட வரலாற்றை சிந்துசமவெளி அகழாய்வின் அடிப்படையில் மறுஆய்வு செய்ய வேண்டிய வரலாற்றுக் கட்டாயத்தையும், அவசியத்தையும் உருவாக்கியிருக்கிறது என தன்னுடைய உரையில் முதல்வர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

சிந்துசமவெளி அகழாய்வில் கிடைத்துள்ள வரிவடிவங்களும், "காளை" சின்னம் பொறிக்கப்பட்ட மண் ஓடுகளும், ஏனைய பிறசான்றுப் பொருட்களும் தொல்லியல் வல்லுனர்களின் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ள நிலையில் இன்னும் தெளிவானதும், தலைசிறந்த தொல்லியல் வல்லுனர்களால் முழுமையாக ஏற்றுக் கொள்ளக்கூடிய விளக்கங்கள் இதுவரையிலும் கிடைக்கவில்லை. ஆய்வாளர்களும், அறிஞர்களும் ஆச்சரியப்படத்தக்க வகையில் சிந்து சமவெளி அகழாய்வில் கிடைத்த சான்றுப் பொருட்களும், குறியீடுகளும் மட்பாண்ட ஓடுகள் மீது எழுதப்பட்டுள்ள எழுத்துக்கள் உள்ளடக்கிய மட்பாண்ட ஓடுகள் போன்று வைகை கரையில் மதுரைக்கு அருகில் சிவகங்கை மாவட்டத்தில் அமைந்த கீழடி அகழாய்வில் கிடைத்திருக்கிறது. அதுமட்டுமல்ல, வரலாற்று ஆய்வாளர் ஆர். பாலகிருஷ்ணன் ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதி வெளியிட்டுள்ள "ஒரு பண்பாட்டின் பயணம்" (A journey of civilization) என்ற புத்தகத்தில் சிந்துசமவெளி நாகரிகம் தொன்மையான தமிழ் இனத்தின் நாகரிகம் தான் என்பதற்கான சுவடுகளும், சான்றுகளும் கீழடி அகழாய்வில் கிடை த்துள்ளன எனவும் சிந்துவெளியில் உள்ள சில ஊர்ப் பெயர்கள், தமிழ்நாட்டிலும் அதே பெயரில் உள்ளது என்பதை தன்னுடைய ஆய்வு நூலில் வெளிப்படுத்தியிருக்கிறார். எனவே, சிந்துவெளி நாகரிகம் என்பது தமிழர்களுடைய தொன்மையான நாகரிகம்தான் என்று தக்க ஆதாரங்களுடன் தெளிவுபடுத்துகிறார். அதுமட்டுமல்ல, சிந்து வெளியின் தொன்மையான தமிழரின் நாகரிகம்தான் திராவிட நாகரிகமாகும். ஆரியர்களின் வருகைக்கு முன்னர் திராவிடர்கள் இந்திய துணைக் கண்டம் முழுமையும் பரவி வாழ்ந்திருக்கிறார்கள் என்ற உண்மை சிந்துவெளி அகழாய்வு மூலம் வெளிப்படுகிறது.

1924 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபதாம் நாள் அன்று இந்திய தொல்லியல் துறை நிர்வாக இயக்குனர் ஜான்மார்ஷல் "The illustrate London news" என்ற பத்திரிகையில் அகழாய்வு அறிக்கையை வெளியிட்டு, இந்திய துணைக் கண்ட வரலாற்றில் ஒரு திருப்புமுனையை உண்டாக்கியதாகவும் முதல்வர் தன் உரையில் குறிப்பிடுகிறார். ஆரியர்களுடைய வருகைக்குப் பின்னர் ஆதிக்கம் பெற்ற வேதக் கருத்துகளும் - மனுதர்ம கோட்பாடுகளும், சமஸ்கிருத மொழியும் சிந்து வெளி நாகரிகத்திற்கு காலத்தால் மிகவும் பிந்தியவையாகும் என்பதை ஜான்மார்ஷல் அவர்கள் உலகுக்கு தெளிவுபடுத்திய ஆண்டு தான் 1924 ஆம் ஆண்டாகும். தமிழர்களின் தொன்மையான பண்பாட்டின் வரலாற்றை உள்ளடக்கிய ஜான்மார்ஷலின் அகழாய்வு அறிக்கையை முதல்வர் அவர்கள் சென்னை ஆவணக் காப்பகத்தில் இருந்து பொதுவெளிக்கு எடுத்து வந்து, தமிழ்நாடு மட்டுமல்லாமல் உலக நாடுகள் முழுமையும் பரவி வாழும் தமிழர்களின் கலாச்சாரப் பெருமைகளை இந்த விழாவின் மூலம் அறியச் செய்து, உலக நாடுகள் தழுவிய தமிழ் சமுதாயத்திற்கு விழிப்புணர்ச்சியை உருவாக்கிய வரலாற்றுப் புகழும், பெருமையும் தமிழ்நாட்டின் முதல்வரையே சாரும் என்பதில் ஐயமில்லை! முதல்வர் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலுக்கு முன் அறிவித்த இந்த வாக்குறுதியினை முழுமையாக நிறைவேற்றும் முனைப்புடன் தான் ஆவணக் காப்பகத்தில் அசைவின்றி அடுக்கி வைக்கப்பட்ட கோப்புகளுக்கு உள்ளிருந்த வரலாற்றுச் செய்திகளை பொதுவெளிக்கு எடுத்துவந்து தமிழ் இனத்திற்கு மறுமலர்ச்சியையும், புத்துணர்ச்சியையும் இன்று உருவாக்கியிருக்கிறார். முதல்வர் அவர்கள், இந்த முயற்சியினை மேற்கொள்ளாவிட்டால் ஜான்மார்ஷல் அவர்களுடைய அறிக்கையின் நூற்றாண்டு விழா ஆவணக் காப்பகத்தின் வளாகத்துக்குள்ளேயே சம்ரதாயச் சடங்காக நிறைவு பெற்றிருக்கும். இதுமட்டுமல்ல; இத்தகைய மறுமலர்ச்சியும், புத்துணர்ச்சியும் காலம்காலமாகத் தொடர்ந்து கொண்டே இருக்க வேண்டுமென்ற தொலைநோக்கு சிந்தனையோடு, மண்ணுக்கடியில் இன்னும் புதைந்து கிடக்கும் தமிழர்களின் பண்பாட்டுச் சுவடுகளை, அகழாய்வு செய்து அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகவும், ஏற்கனவே அகழாய்வில் கிடைக்கப் பெற்றுள்ள சான்றுப் பொருள்களையும், குறியீடு களையும், மட்பாண்டங்களில் காணப்படும் எழுத்துக்கள் எப்பொருள் பற்றிக் குறிப்பிடுகின்றன என்பது குறித்தும் "காளை" சின்னம் எப்படி சிந்துவெளி அகழாய்விலும், கீழடி அகழாய்விலும் ஒரே மாதிரியாக கிடைத் துள்ளது என்பதற்கான அறிவியல் பூர்வமான ஆய்வுகளை மேற்கொண்டு அறிஞர்கள் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் விடையும் விளக்கமும் அளிப்பவர்களை ஊக்கப்படுத்தி உற்சாக மூட்டுவதற்காக மூன்று முத்தான அறிவிப்புகளை முதல்வர் முன்வைத் துள்ளார். அந்த அறிவிப்புகள் முதல்வர் அறிவித்தபடி வரவேண்டும் என்பதற்காக இங்கு அப்படியே கொடுக்கப்பட்டுள்ளது.

**மூன்று முத்தான அறிவிப்புகள்!**

★ செழித்து வளர்ந்த சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் நம்மால் தெளிவாக புரிந்துக்கொள்ள முடியவில்லை. நூறு ஆண்டுகளைக் கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளிப் புதிர் பற்றி உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள். மொழியியல் தமிழ் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து கொண்டு இருக்கிறார்கள் அந்த முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில், சிந்துவெளிப் புதிருக்கான உரிய விடையை கண்டுபிடித்து, சிந்துவெளி எழுத்து முறையை தெளிவாக புரிந்துக்கொள்ள உதவும் வழிவகையை தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும்படி வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்புக்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் பரிசாக வழங்கப்படும் என்பது முத்தான முதல் அறிவிப்பு!

★ சிந்துவெளி பண்பாடு குறித்து தொடர் ஆராய்ச்சிகளை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையுடன் இணைந்து ரோஜா முத்தையா நூலகத்தின் சிந்துவெளி ஆராய்ச்சி மையம் மேற்கொள்ளும் வகையில் தலைசிறந்த தொல்லியல் அறிஞர் ஐராவதம் மகாதேவன் அவர்கள் பெயரில் ஓர் ஆய்வறிக்கை அமைக்க 2 கோடி ரூபாய் நல்கை வழங்கப்படும் என்பது இரண்டாவது அறிவிப்பு!

★ தமிழ்ப் பண்பாட்டின் தொன்மையை உலகமே தெரிந்து கொள்ள வேண்டும் என்று ஓயாமல் உழைக்கும் தலைசிறந்த தொல்லியல் அறிஞர்கள் மட்டுமின்றி, கல்வெட்டியல் ஆய்வாளர்கள். நாணயவியல் வல்லுநர்கள் ஆகியோரையும் ஊக்கப்படுத்தும் விதமாக, ஆண்டு தோறும் இரண்டு அறிஞர்களுக்கு விருதுகள் வழங்கப்படும். இது மூன்றாவது அறிவிப்பு.

உலக நாடுகள் தழுவிய அறிஞர்கள் சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை ஆய்வுசெய்து அத்துறை சார்ந்த வல்லுனர்கள் அறிவியல் அடிப்படையில் விளக்கம் அளிப்பார்களேயானால், அந்த அறிஞருக்கோ அல்லது அந்த நிறுவனத்திற்கோ ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் வழங்கப்படும் என்ற அறிவிப்பு இந்தப் புதிருக்கான சரியான தீர்வை நிச்சயம் வழங்கும். அதுமட்டுமல்ல உலகநாட்டு தொல்லியல் அறிஞர்களுக்கும் வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதால் இதற்கான தீர்வு நிச்சயம் விரைவில் கிடைக்கும். அதுவரையில் இந்த அறிவிப்பும், அதற்கான ஆய்வும் உலக நாட்டு அறிஞர்களின் பேசும் பொருளாகவே நிச்சயம் இருக்கும். மற்றைய இரண்டு அறிவிப்புகளும் இத்துறைசார்ந்த அறிஞர்களின் ஆர்வத்தையும், அக்கறையையும் கூர் தீட்டி விரைவுப்படுத்தும். இந்த நூற்றாண்டு நிறைவுவிழா நிகழ்ச்சியின் மூலம் தமிழர்களின் தொன்மையான பண்பாட்டின் சான்றாவணங்களும், சான்றுப் பொருட்களும் வியத்தகு முறையில் வினாவில் வெளிவரும் என்பதில் இருவேறுகருத்துக்கு இடமில்லை. இந்த வரலாற்றுப் பெருமைக்கும், புகழுக்கும் தமிழ்நாடு முதல்வர்தான் ஆக்கபூர்வமான முன்னெடுப்புகளை மேற்கொண்டவர் என்பது என்றும் அழியாத வரலாற்றுப் பதிவாகும்.

தமிழ்நாட்டின் முதல்வர் ஆட்சிப் பொறுப்பினை ஏற்று "திராவிட மாடல்" ஆட்சியினை அமலாக்கம் செய்யத் தொடங்கிய இக்காலகட்டத்தில், மதவெறி சக்திகள் ஒன்றிய பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சியை தங்களுக்குச் சாதகமாக்கிக் கொண்டு, மீண்டும்,

வேதகால மனுதர்ம ஆட்சியை உயிர்ப்பிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள் என்பதும், அவர்களது இந்த தீயநோக்கத்தின் தொடக்கமாக இந்திய அரசியல் சட்டத்தை (Constitution of India) செயலிழக்கச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள் என்பதும் ஆழ்ந்து ஒன்றிய அரசியல் போக்கினை கவனிப்பவர்களுக்கு எளிதில் விளங்கும். இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தில், மதவெறிகருத்துகளைப் பரப்பிடும் "வைரஸ் கிருமிகளை" அழித்திடும் மாற்று ஏற்பாடாக தமிழ்நாடு முதல்வர் மேற்கொள்ளும் அறிவுப்பூர்வமான இத்தகைய ஒவ்வொரு நடவடிக்கையும் தமிழ்நாட்டில் மட்டுமல்ல, இந்திய ஒன்றியம் முழுவதும் இதன் தாக்கமும் வீச்சும் இருக்கும் என உறுதியாக நம்பலாம்.